2012 மே 15]

பெரம்பலூர் தொகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையான குன்னம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஆலத்துறையைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய வட்டத்தையும், வள்ளன்மையோடு வாரி வழங்கிய வான்மேகம் கொண்ட எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-45

வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிற தொழிலாளர் நல அலுவலகத்திற்குப் புதிய சொந்தக் கட்டடத்தை அமைத்துத் தருவேன் என்ற உத்தரவாதத்தை அளித்து இருக்கிற தொழிலாளர்களின் விடிவெள்ளி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினைச் சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 271, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. வீரமணி. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

271—

சித்த மருத்துவக் கல்லூரி

***5501—திரு. கே.சி. வீரமணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஏலகிரி மலை அடிவாரப் பகுதியில் சித்த மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஏலகிரி மலை அடிவாரத்தில் சித்த மருத்துவக் கல்லூரி அமைப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. வீரமணி அவர்கள்.*

திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏலகிரி மலை அடிவாரப் பகுதி, நஞ்சை, புஞ்சையெல்லாம் கொஞ்சி விளையாடக்கூடிய இயற்கையான சூழ்நிலையிலே அமைந்திருக்கக்கூடிய ஒரு அழகான பகுதி. இந்தப் பகுதியிலே சித்த மருத்துவக் கல்லூரியை உருவாக்கித் தந்தால் அது சிறப்பு வாய்ந்ததாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அந்த மருத்துவக் கல்லூரியை உருவாக்குவதற்கு முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் அரசுத் துறையின்கீழ் மருத்துவமனை அமைந்த இரண்டு சித்த மருத்துவக் கல்லூரிகள், சென்னை அரும்பாக்கம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையிலும் இயங்கி வருகின்றன. அதுபோல் தனியார் கட்டுப்பாட்டில் 5 சித்த மருத்துவக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் செயல்பட்டு வருகின்ற அந்த 2 அரசுக் கல்லூரிகளும் 5 தனியார் கல்லூரிகளும் தமிழகத்திலுள்ள சித்த மருத்துவமனையின் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக உள்ளன.*

மேலும், வேலூர் மாவட்டத்தில் 42 இடங்களில் சித்த மருத்துவப் பிரிவு செயல்பட்டு வருவதாலும், சித்த மருத்துவமனை சிகிச்சையை நாடுவோரின் தேவையைப் பூர்த்தி செய்ய போதுமானதாக அது உள்ளதாலும், வேலூர் மாவட்டம் ஏலகிரி மலையில் சித்த மருத்துவப் பிரிவு அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தாலும், வருங்காலத்தில் தேவையின் அடிப்படையில் தமிழக அரசின் நிதிநிலையைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை மாண்புமிகு அம்மாவின் அரசு கனிவுடன்

பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 272, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

272—

திருமண மண்டபம்

***5715—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூரிலுள்ள அருள்மிகு வெள்ளைப் பிள்ளையார் திருக்கோயில் வளாகத்தில் திருமண மண்டபம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் மற்றும் நகர், அருள்மிகு வெள்ளை வினாயகர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் சார்பாக திருமண மண்டபம் கட்ட சுமார் 10,000 சதுர அடி இடம் தேவைப்படுகிறது. இத்திருக்கோயில் சார்பில் திருமண மண்டபம் கட்ட போதுமான இடவசதி இல்லாததால் திருமண மண்டபம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*